சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

**முன்னிலை : திருமதி.A.பர்சத் பேகம் பிஏ.எம்.எல்.,**

சார்பு நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்

2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 -ம் நாள், திங்கட்கிழமை.

I.A.No.2/2025

in

H.M.O.P.No.33/2024

ஜெயகணேஷ் ..........மனுதாரர்/மனுதாரர்

/எதிர்/

கல்யாணி --- எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இந்த மனு இந்நீதிமன்றம் முன்பாக 06.10.2025 தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.அனந்தசுப்பிரமணியன் அவர்களும், எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அங்கப்பன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரரின் மைனர் மகள் வயது 5 உள்ள காவியதர்ஷினி இளவர் நிலையில் இருப்பதால் தகப்பனார் என்ற முறையில் இளவர் காலம் முடிவுறும் வரைக்கும் நேரில் பார்த்திட காலம், தேதி கிழமை குறிப்பிட்டு அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி பிரிவு 26 இந்து திருமண சட்டப்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் -**

இந்த மனுதாரர் பிரதான மனுவிலும் மனுதாரர் ஆவார். எதிர் மனுதாரருடன் கடந்த 16.5.2019 அன்று நடந்த திருமணத்தை ரத்து செய்யக்கேட்டு அசல் மனுவை தாக்கல் செய்துள்ளார். வழக்கு விவரங்கள் மனுதாரருக்கு நன்கு தெரியும். மனுதாரருக்கும்

எதிர்மனுதாரருக்கும் கடந்த 16.05.2019ம் தேதி பாளையங்கோட்டை தெற்கு பஜார் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்பு மனுதாரர் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து வந்தார். திருமணத்திற்கு பிறகு தற்போது வரை ஓசூரில் உள்ள ஸ்ரீசந்திரசேகர் மருத்துவமனையில் வேலைபார்த்து வருகிறார். திருமணத்திற்கு பிறகு உபய மனுதாரர்கள் ஓசூரில் குறைந்த வாடகை வீட்டிற்கு குடிபெயர்ந்தார். எதிர்மனுதாரர் வசதியான நிலசுவன்தாரர் என்பதால் மனுதாரரை ஏளனமாக பார்க்கும் நபராகத்தான் தரம் வசதி இல்லாத நபர்போல் மனுதாரரை பார்க்கும் விதமாக திருமணம்நடைபெற்றது. திருமணம் நடைபெறுவதற்கு முன்பே ஓசூரில் தான் வேலை என்றுசொல்லித்தான் திருமணம்நடந்தது. மனுதாரரும் எதிர்மனுதாரரும் தனியாக ஓசூரில் வசித்து வந்தனர். எதிர்மனுதாரர் அதிக நேரம் போனில் இருந்து மனைவிக்குரிய கடமைகளை செய்யாமல் இருந்துள்ளார். வருமானம் மீறிய செலவுகளினால் அன்றாட செலவுக்கு கூட கடன் வாங்கும் நிலைக்கு மனுதாரர் தள்ளப்பட்டுள்ளார். இருவருக்கும் தாம்பத்திய வாழ்க்கை பெயரளவில் ஏற்பட்டு எதிர்மனுதாரர் கருத்தரித்து பெண்குழந்தை பிறந்துள்ளது. குழந்தை பிறந்த நேரத்தில் கொரோனா பெருந்தொற்று நடந்த காலமாதலால் குழந்தையை பார்க்க அனுமதி கிடைப்பது அரிதாகியிருந்தது. ஆனால் குழந்தை பிறந்த 7வது நாளில் மனுதாரரிடம் தகவல் தெரிவிக்காமல் குழந்தைக்கு அவர் இஷ்டம்போல் பெயர் வைத்து விட்டு பதிவுசெய்துவிட்டு எதிர்மனுதாரர் சென்றுவிட்டார். அந்த குழந்தையின் பெயரை மருத்துவமனையின் பதிவேடை பார்த்து மனுதாரர் தெரிந்துகொண்டார். மனுதாரர் பெற்றோருடன் சமாதானம் பேசி 2022 செப்டம்பர் மாதம் எதிர்மனுதாரரரை அழைத்து வந்தார். ஆனால் குழந்தை மனுதாரரை மாமா என்று அழைப்பதை பார்த்து மனுதாரர் மனவேதனை அடைந்தார்.

எதிர்மனுதாரர் மனுதாரருடன் அடிக்கடி பிரச்சனை செய்து தனியாகவே அறையில் இருந்துள்ளார். மனுதாரரின் சகோதரிகள் எவ்வளவோ எடுத்துக்கூறியும் கேட்கவில்லை அவர்கள் போனில் பேசியபோது எந்தவித பதிலும் தெரிவிக்கவில்லை. எதிர்மனுதாரர் பேசிய உரையாடல்களை செல்நம்பரில் பதிவு செய்து pendrive ல் சேமித்து வந்தார். மனுதாரர் மாதம் ரூ.21,800 மட்டுமே வருமானம் பெற்று வருகிறார். தனது வயதான பெற்றோருக்கு மருத்துவசிகிச்சை செய்து வருகிறார். மாத வாடகை ரூ.10,000/- செலுத்தி வருகிறார். அவரது பெற்றோரின் மருத்துவசெலவுக்காகவும் பல்வேறு இடங்களில் கடன் பெற்றுள்ளார். அதிக நேரம் நின்று வேலைபார்ப்பதால் synovectomy surgery செய்து அதிக பளு கொண்ட வேலைகளை செய்ய இயலாத நிலையில் உள்ளார். அதனை பற்றி கூட எதிர்மனுதாரர் கேட்கவில்லை. மனுதாரர் அவர் வேலை பார்க்கும் மருத்துவமனை ரெப் மூலம் அவரது பெற்றோர்களுக்கு சலுகை அடிப்படையில் மாதம் ரூ.2000 மருந்து வாங்கி கொடுத்து வருகிறார்.ஓசூரில் கணவன் மனைவியாக வாழ விருப்பத்துடன் மனுதாரர் இருக்கிறார். பெண்ணுக்குண்டான அன்பு இல்லாமல் இருப்பதால் தனது மகளையும் அன்பில்லாமல் அப்பா என்ற நபர் தவறான நபர் போல் தவறான முறையில் சித்தரித்து குறை கூறியுள்ளார். மனுதாரர் குழந்தையை பார்க்க வேண்டும் என்றுகூறியும் எதிர்மனுதாரர் அதற்கு அனுமதி தரவில்லை. விடுமுறை நாட்களில் தன்னுடன் வசிக்க வருமாறு அழைத்தும் வரவில்லை. விடுமுறை காலத்தில் குழந்தையை மனுதாரருடன் இருக்க வேண்டியும் முயற்சித்தும் இயலவில்லை. குழந்தையை பார்க்க பல முறை அனுமதி கேட்டும் எதிர்மனுதாரர் மறுத்து வருகிறார். எதிர்மனுதாரர் மன நலம் பாதிக்கப்பட்ட நபர் போல் தனிமையில் வசித்து வருகிறார். பல முறை நேரில் சந்தித்தும் எதிர்மனுதாரர்மறுத்து வருகிறார். எதிர்மனுதாரர் நிலச்சுவான்தாரர் நிலைமையில் வாழ்ந்து வந்ததால் மனுதாரருடன் வாழ மறுத்து தனது

பெற்றோருடன் வசித்து வருகிறார். மனுதாரருடைய வாழ்க்கைமுறைக்கு பழகிக்கொள்ள அறிவுறுத்தி எதிர்மனுதாரரோடு மனுதாரர் வாழ தயாராக இருந்தும் எதிர்மனுதாரர் மறுத்து வருகிறார். குழந்தையை பார்க்க அனுமதி மறுக்கிறார். மனுதாரர் பல முறை பணம் கொடுத்தும் அதை மறைத்து இடை மனு எண்.1/2025 தாக்கல் செய்துள்ளார். எனவே குழந்தையை பார்க்க அனுமதி வேண்டியும் வாரம் ஒருமுறையாவது மனுதாரருடன் வாழ்வதற்கு அனுமதிக்க வேண்டியும் மனுதாரருடை யஅப்பா அம்மா இருவரும் பொது இடத்தில் குறிப்பிட்ட நாள் குறிப்பிட்ட நேரத்தில் பார்க்க அனுமதிக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்**

மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு சங்கதிகள் உண்மையல்ல. மனுதாரர் எதிர்மனுதாரரையும் அவரது குழந்தையையும் துன்புறுத்துவதற்காகவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே ஆரம்ப நிலையிலேயே இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியதாகும். மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்து பெறுவதற்காகவே தவறான சங்கதிகளை கொண்டும் எதிர்மனுதாரருடைய நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையிலும் அசல் விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் எதிர்மனுதாரரிடம் வரதட்சனை கேட்டு மனதளவிலும், உடலளவிலும் கொடுமைகள் செய்து எதிர்மனுதாரர் கருவுற்றிருந்த சமயத்திலும் அவரை ஒரு அறையில் பூட்டி வைத்து கொடுமைகள் செய்துள்ளார். குழந்தை பிறந்த பிறகு மனுதாரர் இன்று வரை அந்த குழந்தையை பார்க்க வந்ததில்லை. எதிர்மனுதாரரும் அவரது குழந்தையும் தனியாக வசித்து வருகிறார்கள். 04.10.2022 லிருந்து இன்று வரை எதிர்மனுதாரருக்கோ அவரது குழந்தைக்கோ எந்தவிதமான பண உதவியும்

செய்யவில்லை.30.04.2024 அன்று விவாகரத்து மனு தாக்கல் செய்யும்போது கூட எதிர்மனுதாரருடைய குழந்தையை பற்றி கவலைப்படவில்லை. மேற்படி விவாகரத்து மனு 2 வருட காலமாக விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. எதிர்மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்த மனுவை இழுத்தடிப்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு அவரது குழந்தையின் மீது துளி அளவும் கூட அன்பு கிடையாது இருந்து வருகிறார். ஆனால் மனுதாரர் எதிர்மனுதாரரின் நற்பெயரின் மீது களங்கம் சுமத்துகிறார். மேலும் எதிர்மனுதாரரின் குழந்தை அவரது தகப்பனாரான மனுதாரரை பார்க்க விரும்பவில்லை. மனுதாரரின் கொடுமைகளுக்கு பிறகு தற்போது தான் எதிர்மனுதாரரும் அவரது குழந்தையும் அமைதியான வாழ்கையை ஆரம்பித்துள்ளார்கள். மீண்டும் மனுதாரர் அவரது குழந்தையை பார்க்க வந்தால் அது குழந்தையின் மனதைப்பாதிக்கும். எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரையில் கேட்கடப்பட்டுள்ளது.

5. இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றவாணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

**7. தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரருக்கு மனுப்பரிகாரம் கிடைக்கக்கூடியதா? இல்லையா? என்பதே ஆகும்.

**8**. - இரு தரப்பு வாதவுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரரின் மைனர் மகள் வயது 5 உள்ள காவியதர்ஷினி இளவர் நிலையில் இருப்பதால் தகப்பனார் என்ற முறையில் இளவர் காலம் முடிவுறும் வரைக்கும் நேரில் பார்திட காலம்,

தேதி குறிப்பிட்டு, கிழமை குறிப்பிட்டு அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**9**. மனுதாரர் தகப்பனார் என்ற முறையில் குழந்தையை பார்ப்பதற்கு உரிமை உடையவர். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே நடக்கும் பிரச்சனைகளை ஆராந்து பார்த்ததில் குழந்தைக்கு பெற்றோர்களின் பிரிவை பார்க்கும் போது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மனுதாரருடைய பெற்றோர்களுக்கும் தாத்தா பாட்டி என்ற முறையில் குழந்தைக்கு அதிக பட்ச அன்பை செலுத்த வேண்டியவர்கள் , அவர்களுடைய அன்பு என்பது குழந்தையின் எதிர்காலத்திற்கும் மிக சிறந்த ஈடு இணையற்றது ஆகும். எனவே இந்த மனுவை பொருத்த வரை Sheoli Hati Vs Samnath Dos (2019) 7 Sec 490 என்ற முன் தீர்ப்பில் கூறியுள்ளவாறு Welfare of the child is of paramount consideration என்று சொல்லி உள்ளது. குழந்தைக்கு தாத்தா பாட்டியயுடைய பாதுகாப்பும் அறிவுரைகளும் பெற்றோர்களுக்கு அடுத்ததாக கொடுக்ககூடியவர்கள் ஆகும்.

**10**. இந்த மனுவை பொருத்த வரை உபய மனுதாரருக்கு குழந்தை பிறந்து 5 வருடங்களாகியும் குழந்தையை பார்க்க விரும்பாத தனது மாமியார், மாமனார் தற்போது ஏன் விரும்புகிறார்கள் என எதிர்மனுதாரர் ஆட்சேபனை செய்துள்ளார். ஆனால் மனுதாரருடைய தாயார் இருதய அறுவை சிகிச்சை செய்துள்ளதாகவும் தன் வாழ்நாளிலேயே குழந்தையை பார்க்க விரும்புவதாகவும் கூறி குழந்தையை பார்க்க அனுமதி கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக மனுதாரர் சொல்லியுள்ளார். இது உணர்வுபூர்வமான அத்தியாவசியம் ஆகும். எதிர்மனுதாரர் மனதை பொருத்த வரை மனுதாரர் வீட்டாரிடம் தான் பட்ட கஷ்டத்தை நினைத்த பொழுது உதவி செய்யாது பாசத்தை காண்பிக்காத நபருக்கு குழந்தை மீது தற்போது ஏற்பட்டுள்ள பாசம்

ஏற்கத்தக்கதல்ல என்றும் உள் நோக்கத்துடன் கூடியதாக உள்ளது என ஆட்சேபனை செய்துள்ளார். அவைகளை ஒரு சேர பார்க்கும் போது மனுதாரருடைய குழந்தையை பார்க்க மனுதாரர் தாயார் இயற்கையாக கொண்ட அன்பை உணர்ந்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக அனுமானிக்ககூடியதாக உள்ளது. மாண்புமிகு உயர் நீதிமன்றம் உட்பட பல்வேறு உயர் நீதிமன்றங்களில் மீண்டும் மீண்டும் குழந்தை வளர்த்தலை வலியுறுத்தி கூறும் போது non custudial parants visitation including grandparents right, Mandate emphetic consideration of these rights and Grand parents are seen as integral to a child, bringing with court recognizing and even granting them visitation rights என்று சொல்லியுள்ளார். இதனை பரிசீலித்து பார்க்கும் போது இந்த மனுதாரருடைய தாயார் உடல் நிலையை கருத்தில் கொண்டு அவருடைய வாழ்நாளில் கடைசி காலத்தில் தனது மகனின் குழந்தையை பார்க்க விரும்பி உள்ளதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. அவ்வகையில் இந்த மனுதாரர் கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில் இந்த மனுவை அனுமதித்து, மனுதாரரும் அவருடைய பெற்றோர்களும் எதிர்மனுதாரர் முன்னிலையில் தேவைப்பட்டால் பொதுநபர் முன்னிலையிலும் பொது இடத்தில் வைத்து ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை குழந்தையை பார்க்க அனுமதித்து குழந்தையின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து அன்புடன் அணுகி பார்த்து மகிழ அனுமதி வழங்கப்படுகிறது. மனுஅனுமதிக்க செலவுத் தொகைக்கு உத்தரவு இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**

**திருவைகுண்டம்**

**உபய தரப்பு சாட்சி : இல்லை**

**உபய தரப்பு சாண்றாவணங்கள்-இல்லை**

**சார்பு நீதிபதி,**

**திருவைகுண்டம்**

சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

I.A.No.2/2025

இன்

HMOP.No.33/2024

உத்தரவு

நாள்ஃ 13.10.2025.

1.